**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.95/2022**

**Deposition of Witness for : P.W.10**

**Name : திருமதி. காயத்ரி**

**Husband's Name : வினாயகமூர்த்தி**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.11.2023.**

முதல் விசாரணை -

நான் நடுக்குப்பம் கிராமத்திற்கு 1.7.2022ல் இருந்து கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். அதற்கு முன்பு நெசல் கிராம கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது. 20.10.2021 அன்று 3 மணிக்கு நான் அலுவலக பணியில் என்னுடைய அலுவலகத்தில் இருந்தபோது, புருஷோத்தமனை கொலை செய்துவிட்டதாக சொல்லி ராஜசேகர் என்பவர் வந்தார். அவருடைய அண்ணன் புருஷோத்தமன் ராஜசேகரின் வண்டியை

விற்க முயற்சி செய்வதாக ராஜசேகரின் நண்பர் ஜெயசீலன் தகவல் சொல்ல 19.10.2021 அன்று வந்ததாகவும், வண்டிக்கு லைசென்ஸ் இல்லாததால் விற்க முடியவில்லை என்பதாகவும், அது சம்பந்தமாக புருஷோத்தமனுக்கும் ராஜசேகருக்கும் வீட்டில் பிரச்சனையாகி தகராறு நடந்துக்கொண்டிருக்கும்போது சொத்து தகராறு ஏற்கனவே இருந்த நிலையில் புருஷோத்தமன் அவருடைய பாகத்தை எடுத்துக்கொண்டு ராஜசேகரை பணம் கொடுக்க கேட்டார்.

நீயும் கொடுக்கமாட்டாய், ரமேசும் கொடுக்கமாட்டான் என்பதால் பணத்திற்கு எங்கே போவேன் என்பதால் தான் வண்டியை விற்க சென்றதாக சொல்லியுள்ளார். அந்த வாக்குவாதத்தில் புருஷோத்தமன் இப்படியே செய்துக்கொண்டிருந்தால் பெட்ரோல் ஊற்றி உன்னை கொளுத்திவிடுவேன் என்று ராஜசேகரிடம் சொல்லியுள்ளார். அந்த சண்டையின் மன வருத்தத்தில் வெளியில் வந்த ராஜசேகர் இறந்த புருஷோத்தமன் சொன்னது தனக்கு எடுத்துக்கொண்டு இரவு 10.15 மணிக்கு சேத்பட்டில் உள்ள செல்லம்மா பெட்ரோல் பங்கில் 2 லிட்டர் பெட்ரோலை பாட்டிலில் வாங்கி வந்து வீட்டில் வைத்துள்ளார்.

இரவு 12.00 மணிக்கு மேல் ராஜசேகர் மாடியில் படுத்திருந்த அண்ணன் புருஷோத்தமன் மீது ஊற்றி தீ வைத்து கொளுத்தியுள்ளார். துடித்து எழுந்த புருஷோத்தமனை ராஜசேகரன் காலால் எட்டி உதைத்து காலி மனைக்கு தள்ளியுள்ளார். சம்பவத்திற்கு பிறகு ராஜசேகர் கீழே தன் மனைவி குழந்தைகள் உடன் படுத்திருந்தவர் ஜனங்கள் வந்தவுடன் நெசல் கிராமத்தில் உள்ள சவுக்கு தோப்பிற்கு சென்று பதுங்கியுள்ளார்.

**அன்றைய தினம் 3 மணிக்கு தலைவர் தணிகாசலம் எங்கள் அலுவலகத்திற்கு வேலை விஷயமாக வந்தபோது ராஜசேகர் வந்து எங்கள் அலுவலகத்தில் ஆஜராகி மேற்கண்ட வாக்குமூலத்தை சொன்னதை நான் பதிவு செய்து, பதிவு செய்த வாக்குமூலத்தை காவல் ஆய்வாளருக்கு கடிதத்துடன் ராஜசேகரனை காவல்நிலையத்தில் ஆஜர் செய்தேன்.**

**(கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை கடிதம் மாதிரி பதிவு செய்து ஆஜர் எதிரியும் ஆஜர் செய்வதாக காட்டப்பட்டிருப்பதால் அதை கடிதமாக கருதி குறியீடு செய்ய அனுமதி கேட்டார். அதனால் சாட்சியின் பொருள் அளவில் மட்டும் குறியீடு செய்யப்படுகிறது) கடிதத்தின் பொருள் அளவில் வரை அ.சா.ஆ.6. என்னிடம் சொன்ன அதே வாக்குமூலத்தை காவல் ஆய்வாளரிடம் ராஜசேகரன் சொன்னார். ராஜசேகர் கொடுத்த வாக்குமூலத்தை தட்டச்சு செய்து ராஜசேகரின் கையொப்பம் பெறப்பட்டது.**

**அப்போது நானும் தலைவரும் அங்கு தான் இருந்தோம். நாங்களும் கையொப்பம் போட்டோம். விளை கிராமம் வந்தால் மறைத்து வைத்திருக்கும் பெட்ரோன் கேனை கொடுப்பதாக சொல்லப்பட்டிருந்தது. எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட அ.சா.ஆ.7. நான், தலைவர், போலிசார் ஆகியோர் விளை கிராமத்தில் ராஜசேகர் வீட்டிற்கு சென்றோம். கோழி கூண்டில் இருந்து பெட்ரோல் வாங்கிய கேனை ராஜசேகர் காட்ட போலிசார் எடுத்து அதற்கு கைப்பற்றுதல் மகசர் பதிவு செய்து நானும் தலைவரும் கையொப்பம் போட்டோம். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.8.**

**எடுத்துக்கொடுத்த பெட்ரோல் வாட்டர் கேனை பார்த்தால் அடையாளம்**

தெரியும். நீதிமன்றத்தில் உள்ளது தான் அந்த வாட்டர் கேன். அது சான்று பொருள்-1. என்னிடம் வாக்குமூலம் கொடுத்த ராஜசேகர் நீதிமன்றத்தில் உள்ள ஆஜர் எதிரி தான். எதிரியின் வீடு சம்பந்தமான சொத்திற்கான ஆவணங்களை காவல் ஆய்வாளர் என்னிடம் கேட்டதற்கு நான் கொடுத்துள்ளேன். இதுசம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

எதிரி கொடுத்த வாக்குமூலம் சம்பந்தமாக என்னுடைய உயர் அதிகாரிகளுக்கும் நீதிமன்றத்திற்கும் அனுப்பினேனா என்றால் அன்றைய தினம் அறிக்கையாக உயர் அதிகாரிக்கு சமர்ப்பித்தேன். நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை. எதிரி வாக்குமூலம் கொடுக்க எங்கள் அலுவலகத்திற்கு வந்தபோது தலைவர் தணிகாசலம் இருந்தாரா என்றால் இருந்தார். எதிரி கொடுத்த வாக்குமூலத்தை நான் எழுதினேனா என்றால் எழுதினேன்.

நான் எழுதிய வாக்குமூலம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படவில்லை என்றால் என்னிடம் காட்டப்பட்டது. அறிக்கை என்று சொன்னதால் நான் அதை கடித வடிவில் வாக்குமூலத்தையும் சேர்த்து எழுதி கொடுத்துவிட்டேன். எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் என்னுடைய அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. என்னுடைய அலுவலக முத்திரை உள்ளது என்றால் உள்ளது. கடிதத்தில் அலுவலக முத்திரை போட்டேனா என்றால் போடவில்லை.

ராஜசேகர் வந்து சொல்வதற்கு முன்பு வழக்கை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரி தான். அதற்கு முன்பு ராஜசேகரையும், புருஷோத்தமனையும்

பார்த்தது கிடையாது என்றால் சரி தான். காவல்நிலையத்தில் ஆஜர் செய்த பிறகு எதிரி ராஜசேகரை இன்று தான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால் சரி தான். நான் கடிதம் யாருக்கு பெறுதல் போட்டு அனுப்பினேன் என்றால் காவல் ஆய்வாளருக்கும், வட்டாட்சியருக்கும் எழுதினேன். அறிக்கைக்காக வட்டாட்சியருக்கும், எதிரியை ஆஜர் செய்வதற்காக காவல் ஆய்வாளருக்கும் எழுதினேன்.

நான் தொடர்ச்சியாக எழுதினேன் என்றால் சரி தான். எந்த பேப்பரில் எழுதினேன் என்றால் A4 sheet-ல் எழுதினேன். தலைப்பில் தேதி போட்டு எழுதினேன் என்றால் எழுதினேன். என்னிடம் காட்டப்படும் கடிதத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல என்றால் என்னுடையது தான். கையொப்பம் போட்டு கவரில் வைத்தேனா என்றால் அப்படியே தான் வைத்தேன். சீல் மட்டும் போடவில்லை என்றால் சரி தான். நான் எழுதியது அனைத்தும் பச்சை மை என்றால் புளூ மையில் தான் எழுதினேன். கையொப்பம் போட்டது எல்லாம் புளூ மையில் தான் என்றால் கைப்பற்றுதல் மகசரில் மட்டும் கருப்பு மையில் போட்டிருப்பேன்.

கைப்பற்றுதல் மகசர் எந்த நிற மையினால் எழுதப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னை போலீசார் விசாரித்த போது ராஜசேகர் கொடுத்ததை நான் வாக்குமூலமாக பதிவு செய்ததை குறித்து நான் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் பதிவு செய்த வாக்குமூலத்தையும் போலீசாரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் பதிவு செய்த வாக்குமூலத்தில் ராஜசேகரின் கையொப்பம் பெறப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது என்பதால் கையொப்பம்

பெறவில்லை. ராஜசேகர் என் அலுவலகத்திற்கு வரவில்லை என்றாலும் அவர் எந்தவொரு வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் அதை நான் பதிவு செய்யவில்லை என்றாலும் அதனால் தான் நான் பதிவு செய்த வாக்குமூலம் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றாலும் சரியல்ல, நான் பதிவு செய்ததை தான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நான் எதிரியை ஆஜர் கொடுத்ததாக சொல்லப்பட்ட கடிதமானது காவல் நிலையத்தில் வைத்து தான் எழுதப்பட்டது என்றால் என்னுடைய அலுவலகத்தில் வைத்து தான் எழுதப்பட்டது. கடிதத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றாலும் காவல் நிலையத்தில் இருந்த காவலரால் எழுதப்பட்டது என்றால் சரியல்ல, நான் தான் எழுதினேன். அதனால் தான் எழுதியது புளூ மையிலும் கையொப்பம் கருப்பு மையிலும் உள்ளது என்றால் எழுதியது புளூ மையினால் தான், கையொப்பம் என்னுடைய பையிலிருந்த கருப்பு மையில் எடுத்து போட்டேன்.

களப்பணியின் அடிப்படையில் எப்படி வாக்குமூலம் வாங்க வேண்டும் என்ற விவரம் எல்லாம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு வாக்குமூலம் கொடுப்பவரின் கையொப்பம் பெற வேண்டும் என்பது எனக்கு தெரியும் என்றால் தெரியும், கடித வடிவில் கொடுத்ததால் இவ்வழக்கில் நான் கையொப்பம் பெறவில்லை. கேனுக்கும் பாட்டிலுக்கும் வித்தியாசம் எனக்கு தெரியும் என்றால் தெரியும்.

போலீசாருக்கு கட்டுப்பட்டு போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து எழுதி கொடுக்கப்பட்ட ஆவணத்தில் நான் கருப்பு மையில் கையொப்பம் போட்டுவிட்டு தற்சமயம் மாற்றி தவறுதலாக

**சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் எதிரி ராஜசேகர் வரவும்இல்லை எந்தவொரு வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து எந்தவித பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.**

**தலைவர் தணிகாசலம் எங்கள் அலுவலகத்திற்கு வந்தார் என்பதே கற்பனையான ஒன்று என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம், மகசர் போலீசார் கையினால் எழுதினார்கள் என்றால் ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டது, கைப்பற்றுதல் மகசர் எழுதப்பட்டது. என் அலுவலகத்திலிருந்து ராஜசேகர் வீட்டிற்கு சென்றேனா என்றால் செல்லவில்லை.**

**எனக்கு பரிட்சியம் இல்லாத நபரான எதிரி என்னிடம் வந்து சரண்டரானார் என்பதும் வாக்குமூலம் கொடுத்தார் என்பதும் எதிரிக்கு அவசியமில்லாத ஒன்று என்றால் எதிரி காவல் நிலையத்திற்குச் செல்ல பயந்து தலைவர் எங்கள் அலுவலகத்தில் இருந்ததால் வந்து வாக்குமூலம் கொடுத்தார். இவ்வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாதும் என்றாலும் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களுக்கு நான் கையொப்பம் போட்டுவிட்டு நான் சாட்சியம் அளிப்பதால் தான் புருஷோத்தமன் இறந்த தேதி கூட எனக்கு தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இறந்தது 2 நாட்கள் பிறகு என்பது எனக்கு தெரியும், நான் விடுப்பில் சென்றதால் பொறுப்பு கிராம நிர்வாக அலுவலர் இறப்பு பற்றி தகவல் கொடுத்துள்ளார்.**

**2 நாட்கள் கழித்து இறந்ததாக சொல்வதே பொய் என்றாலும் மேற்கண்ட**

சங்கதியையும் போலீசார் சொல்லி கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படும் சா.பொ.1-ஐ எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. அரசு ஊழியர் என்பதால் நான் போலீசாருக்கு கட்டுப்பட்டு போலீசாருக்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

கைப்பற்றுதல் மகசரை யார் எழுதினார்கள் என்றால் நான் எழுதவில்லை. கைப்பற்றுதல் மகாசில் உள்ள கையெழுத்தும் என்னுடைய கடிதமாக குறியீடுச் செய்யப்பட்ட அ.சா.ஆ-6 ஆவணமும் ஒரே நபரால் எழுதப்பட்ட கையெழுத்தாக உள்ளது என்றால் அ.சா.ஆ.6ல் உள்ள கையெழுத்து என்னுடையது. அ.சா.ஆ.6ல் உள்ள கையெழுத்தும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்தும் ஒரே நபரால், ஒரே மையினால் எழுதப்பட்டதாக காணப்படுகிறது என்றாலும் தற்சமயம் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

காவல் நிலையத்திலிருந்து நாங்கள் எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்றால் இரவு 7.30 மணி இருக்கும். நான் என்னுடைய உயரதிகாரியிடம் கொடுக்கப்பட்ட அறிக்கையில் எதிரி சரண்டராகி வாக்குமூலம் கொடுத்தது, வாக்குமூலத்தின் அடிப்படையில் கடிதத்துடன் எதிரியை காவல் நிலையத்தில் ஆஜர் செய்தது, காவல்நிலையத்தில் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு அதனடிப்படையில் பொருட்கள் கைப்பற்றப்பட்டது குறித்து சொல்லியுள்ளேனா என்றால் மேற்கண்ட சங்கதிகளை சொல்லவில்லை, 19-ந் தேதி நடந்த சம்பவத்தை குறித்து மட்டும் அறிக்கையில் சொல்லியுள்ளேன்.

**எங்களுக்கு மூமண்ட் ரிஜிஸ்டர் என்பது ஒன்று உள்ளது என்றால் இல்லை. மூமண்ட் ரிஜிஸ்டர் என்பது கிராம நிர்வாக அலுவலருக்கு உண்டு என்றாலும், அதை தெரிவித்தால் மேற்கண்ட சங்தகிகள் பொய் என்று தெரிந்து விடும் என்பதால் தான் என்றால் மூமண்ட் ரிஜிஸ்டர் நான் பராமரிப்பது இல்லை.**

**பட்டா சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் இல்லை என்றால் ஆய்வாளரிடம் கொடுத்துள்ளேன். பட்டா சம்மந்தமாக கொடுத்ததாக சொல்லப்படும் ஆவணமும் அன்றைய தினம் தானா என்றால் அது வேறு தினத்தில் கடிதம் மூலம் கிடைக்கப் பெற்றது. அந்த கடிதத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். போலீசார் சொத்து சம்மந்தமாக தகராறு குறித்து எதுவும் என்னிடம் விசாரிக்கவில்லை என்றாலும் அதற்கான ஆவணம் எதுவும் நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, விசாரித்தார்கள் நான் கொடுத்துள்ளேன். நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பாக என்னுடைய வாக்குமூலத்தை படித்துவிட்டு வந்து தான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை</u> - இல்லை.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.